RESEARCH ARTICLE

DOI: 10.54392/ ijmrd2333

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

# Reflecting Feminism in the works of Women Writers

## பெண் கவிஞர்கள் படைப்பில் பெண்ணிய ஆளுமை வெளிப்பாடு

**A. Peter Raj** [a, *]

[a] Department of Tamil, Bishop Ambrose College, Coimbatore-641045, Tamil Nadu, India.

*Corresponding author Email: peterraj1333@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2333

Received: 28-06-2023; Revised: 02-09-2023; Accepted: 10-09-2023; Published: 17-09-2023

**Abstract:** Women writers have portrayed the challenges that women undergo in their family, male domination, domestic violence in their work of art. This paper aims to focus on the same objective. Women are treated as an object in terms of business, sexual object by the men community. Their Emotion and feelings have lost its way. Matrimony is considered to be the most scared incident in a women's life. Women lost their independence in choosing partner by their own father. Female infanticide is still continued even today. Working women professionals are also exposed to sexual abuse in the working atmosphere. Women writers have pointed out these injustices against women in their works. This paper brings out the importance of independence in the life of every women and also the emancipation of the oppressed.

**Keywords:** Matrilineal Society, Cultural Integration, Slavery, Women writers

**Language:** **Tamil**

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனைகளை அடியொட்டி மேல் நாட்டு இலக்கியத் தாக்கத்தின் காரணமாக பல்வேறு கொள்கைகளும், கோட்பாடுகளும் தமிழ் இலக்கிய உலகில் உருவாயின. அவ்வகையில் நவீன இலக்கிய வளர்ச்சியின் காரணமாகப் பெண்ணியம் ஒரு இயக்கமாகவும், கோட்பாடாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பல்வேறு பெண் கவிஞர்களால் முன்னேடுக்கப்பட்டு கவிதையின் வழியாகப் படைக்கப்பட்டுள்ளது. கருவறை தொடங்கி கல்லறை வரை பெண்கள் குடும்ப அமைப்பிலும் சமூக அமைப்பிலும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். பெண்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் வன்முறைகளையும் அடக்கு முறைகளையும் அடிமைத்தனங்களையும் ஆணாதிக்கப் போக்குகளையும், வாழ்வியல் சிக்கல்களையும், பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்துக்களையும் பெண் கவிஞர்கள் தங்கள் படைப்பின் மூலம் வெளிப்படுத்தும் பாங்கினை எடுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## பெண்ணியம் விளக்கம்

இருபதாம் நூற்றhண்டுச் சூழலில் மேற்கத்தியத் தாக்கத்தின் காரணமாக மனிதர்களின் வாழ்க்கை முறையில் மட்டுமல்ல கவிதைகள் குறித்த பார்வையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்களுக்கான உரிமைகளை மீட்டெடுக்கும் வண்ணம் பல்வேறு சிந்தனைகள் வெளிவந்தன. அவ்வகையில் பெண்ணியம் என்பது குறித்தான கருத்துக்களும் பரவலாக்கப்பட்டன.

“சமூகத்திலும், வேலைத்தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உயர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப்பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்துபட்ட பயனாக இப்போதைய நிலையில் கொள்ளலாம்” (Sivasubramaniyan, 1991)

## பெண் அடிமை நிலைக்குத் தள்ளப்படுதல்

ஆதிச்சமூகம் வேட்டைச் சமூகம், அச்சமூகத்தில் தலைமைப் பொறுப்பு தாயிடம் இருந்ததை வரலாறுகள் காட்டுகின்றன. பாகுபாடுகள் இல்லாமல் குழுக்களாக வாழ்ந்தார்கள். சொத்துடைமைக்குப் பின் தாய்வழிச் சமூகம் அழிந்த பின் தந்தை வழிச்சமூகம் அமைந்தது. இதன் விளைவாக, ஆணாதிக்கச் சமுதாயம் தன் ஆற்றலை வெளிப்படுத்தத் தொடங்கியது.

சமூகத்தில் ஆண், உயர்ந்தவன், அறிவுடையவன், பகுத்தறிவுத்திறன், மேலாண்மை செய்யும் திறன் உடையவன் என்ற நிலையில் மதிக்கப்பெற்றான். ஆணுக்குப் பெண்கள் அடங்கியிருக்க வேண்டும். கீழ்படிந்து நடக்க வேண்டும் என்று பெண் நிர்ப்பந்திக்கப்பட்டாள். கணவனே கண்கண்ட தெய்வம் கணவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். கற்பைப் பேண வேண்டும். அன்பு, அடக்கம், பொறுமை கொண்டு வாழ வேண்டும் என்பன போன்ற பல கலாச்சாரப் பண்பாட்டு நடைமுறையில் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர்.

“பெண் மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரியானது மேல் சாதிக்காரன் கீழ்ச் சாதிக்காரனை நடத்துவதை விட எசமான் அடிமையை நடதுதுவதை விட மோசனமானதாகும்” (Britto Peeter Singh, 1994).

## தமிழ் இலக்கியங்களில் பெண்கள்

படைப்பாளர்களின் கண்ணோட்டத்திற்கேற்பவும் அவர்களின் ரசனைகளுக்கு ஏற்பவும் பாடுபொருட்களோ, கற்பனைப் பாத்திரமாகவோ பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர். தாய்வழிச் சமுதாயத்தில் தலைமையேற்ற பெண்ணினத்தை ஆண் சமூகம் அவர்களின் ஆற்றலையும், அறிவையும், வலிமையையும் நிராகரித்து அச்சத்தையும், மடமையையும், நாணத்தையும், மென்மையையவும், அணியச் செய்து வீட்டுக்குள் முடக்கினர். சமுதாயம் காப்பாற்றப்பட கலாச்சாரம், பண்பாடு, என்ற கருவிகள் பயன்பட்டது போலவே, இலக்கியங்களையும் பயன்படுத்தினர்.

“ஓர் ஆண் தன் வாழ்நாளில் காலந்தோறும் பெண்களைத் தன் தேவைகளுக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை ஓர் அடிமையைப் போல எப்போதும் வாழத் தன் சட்டத்தை உருவாக்கி, சாஸ்திரம், சம்பிரதாயம் என்ற சங்கிலிகளால் பிணைத்து சமூகத்தில் வாழ வழி வகுத்தது ஆண் சமூகம்” (Seyakumar, 1984).

## பெண்களின் இன்றைய அவலநிலை

பிறப்பு முதல் இறப்பு வரை பெண்களின் வாழ்வில் பிரச்சனைகள் தொடர்ந்து கொண்டே வருகின்றன. பெண்ணாகப் பிறந்து விட்டால் கருவிலேயே சமாதி ஆக்கப்படுகிறாள். பெண் குழந்தை பிறந்து விட்டால் கணவன் மனைவியை அடித்துத் துரத்தும் நிலை காணப்படுகிறது. திருமண வயதில் சந்தையில் விலை போகும் கடைச்சரக்காகப் பெண்கள் பார்க்கப்படுகிறார்கள். வரதட்சணை கொடுக்க முடியாமல் முதிர் கன்னிகளாய் வாழும் அவல நிலை ஒருபுறம். திருமணம் முடிந்த பின்போ அடுப்பங்கறை அடிமைகளாயும், படுக்கையறை பதுமைகளாகவும் மட்டுமே நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். குடிகாரக் கணவனிடம் அல்லல்படும் பெண்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆண் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிற சுதந்திரம் பெண் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. பெண்ணின் கற்பு நிலையைக் காரணமாக்கி பெண் வீட்டிற்குள்ளேயே பூட்டி வைக்கப்படுகிறாள். சட்டமும், சம்பிரதாயமும் பெண்ணை அடிமை நிலையிலிருந்து மீண்டு வராதவாறு பார்த்துக் கொள்கிறது.

“பெண்ணின் கற்புதான் ஆணின் சொத்துரிமைக்கு ஆதாரமாகும். பெண் தன் கற்பைக் காக்கும் பொருட்டு நான்கு சுவர்களுக்குள் சிறைப் பறவையானாள். இவ்விதமே பெண்ணிற்கு வீடே உலகம். ஆணுக்கு உலகமே வீடு என்றாகியது.” (Alphose, 1988)

## வளர்ப்பு நிலையில் பெண்

பெண்ணின் வாழ்க்கை நிலையை ஆராய்ந்து பார்க்கும்போது நமது சமூகத்தில் ஆண் குழந்தை பிறந்து விட்டால் ஆகா. ஆண் பிறந்துள்ளான் என்று மகிழ்ச்சியடைவதும். பெண் குழந்தை பிறந்து விட்டால் மகிழ்ச்சி தொலைந்து சோகமாவதும் நாம் கண்கூடாகக் காணும் உண்மையாகும். நமது வளர்ப்பு முறைகளில் ஆண்களுக்குக் கொடுக்கப்படுகிற மரியாதைகள் பெண்களுக்குக் கொடுப்படுதில்லை. சிறுவயதிலிருந்தே ஆணின் வளர்ப்பு நிலையிலும், பெண்ணின் வளர்ப்பு நிலையிலும் பல்வேறு மாற்றங்கள். ஆணின் அனைத்துச் செயல்பாடுகளும், வெளி உலகைச் சார்ந்தவையாகவும், பெண்ணின் செயல்பாடுகள் அனைத்தும் வீட்டிற்குள்ளேயே முடக்கி வைப்பதாகவும் இருக்கிறது. ஆணை வலிமையுடையவனாகவும், பெண்ணை வலிமை குறைந்தவளாகவும், சிறுவயதிலிருந்தே உருவாக்கப்படுகிறார்கள்.

ஆண் படித்து வெற்றிபெற்றால் மேற்படிப்புக்குத் திட்டமிடும் சமூகம் பெண் வெற்றி பெற்றால் அவளைத் திருமணத்திற்குத் தயாராவதற்கு நாள் குறிக்கிறது. பெண்ணின் வாழ்வு நிலையை பெற்றோரே தீர்மானிக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் ஆண் தனக்கான கனவுகளைத் தானே நிறைவேற்றிக் கொள்பவனாக இருக்கிறான்.

பெண்ணுக்கான தனியான ஆசைகளோ, தேவைகளோ இல்லாமல் அவள் ஆணைச் சார்ந்தே வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். தனித்து சிந்திப்பதும். தனித்து செயல்படுவதிலிருந்தும் நமது சமூக அமைப்பு அவளை ஒதுக்கியே வைத்திருக்கிறது. கல்வி, வேலைவாய்ப்பு என அனைத்திலும் பெண் ஆணை விடத் தனக்கான உரிமைகளை இழந்தே வருகிறள்.

“பெண்ணுக்கு ஆணுக்குரிய சமூக அந்தஸ்தையும் சமமான உரிமையையும் வழங்குவதுதான் பெண்ணுரிமைக்கான தொடக்கமாகும்” (Prema, 1998).

## கற்பும், அடிமைத்தனமும்

கற்பு என்பது தன் கணவனோடு மட்டும் கொண்டுள்ள உறவைச் சுட்டி நிற்பதாகும். நாணயம், சத்தியம் என்பதோடு தொடர்புடையதாக இச்சொல் விளங்குகிறது. கற்பு நிலை என்று சொல்ல வந்த பாரதி இதை இருபாலருக்கும் பொதுவில் வைப்போம் என்றார். ஆனால் கற்பு என்ற நெறியினைக் கொண்டே ஒரு கலாச்சாரம் எழுதப்பட்டுள்ளது. காப்பியங்களின் மூலமும், காவியங்களின் மூலமும் கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா? சீதையா? என்ற கேள்விகள் கேட்கப்பட்டதே தவிர கோவலனா? இராமனா என்ற கேள்விகள் இல்லை. கோவலனைக் கொடுமைக்காரன் என்று யாரும் கூறவில்லை. பொறுமைக்குக் கண்ணகியைக் கடவுளாக்கிக் கண்ணகியைப் போல் பெண்ணைச் வாழச்செய்தனர். பெண்ணை விபச்சாரி என்ற பட்டம் கட்டி அவளை மூலையில் உட்கார வைத்த ஆண் சமூகம் விபச்சாரன் என்ற வார்த்தையை அகராதியில் இல்லாமலேயே ஆக்கிவிட்டது. ஆணையும், பெண்ணையும் தண்டிக்க வேண்டிய சட்டம், பெண்ணை மட்டுமே தண்டிக்கிறது. பெண் மட்டுமே பழி சுமத்தப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்டு தலைகுனிந்து வாழ வேண்டியுள்ளது. இவ்வாறு கற்பைக் காரணம் காட்டிப் பெண்ணை அடிமையாக்கியது.

“பகுத்தறிதல், மேலாண்மை செய்தல் ஆணின் குணம் என்றும், கீழ்ப்படிதல், மென்மையாக இருத்தல் எதிர்ப்புணர்ச்சி இன்மை, கற்பு இவை பெண்ணின் குணம் என்றும் கற்பிக்கப்பட்டதால் அவள் பின் தங்கிப்போனாள்” (Sivasubramaniyan, 1991).

## பெண் கவிஞர்களின் கருத்தியல்

ஆணுக்குள்ள சுதந்திரமும் உரிமையும் பெண்ணுக்கும் உண்டு என்று கூறியதோடு சுதந்திரமாய்த் தான் விரும்பியதைச் செய்யவும் மேற்கொள்ளவும் எழுதவும் உரிமை உண்டு என்று நம்பினர். மேலும் வீட்டிற்குள்ளே பாலியில் உறவுக்காய் வாழ்வதும், குழந்தையைப் பெறுவது மட்டும். வாழ்வை முழுமையாக்காது. தங்களுக்கான வாழ்வை வாழ்வதன் மூலமே வாழ்க்கை முழுமை பெறும் என்று நம்பினர். தங்கள் கௌரவத்தைக் காத்துக்கொள்ளத் தாங்கள் விரும்பிய பணிகளை ஏற்பதும் தங்களுக்கான உரிமையை பெறுவதுமே முக்கியம் என்றும் கருதினர்.

### இன்றைய கவிஞர்களின் வெளிப்பாட்டு முறை

இன்றைய பெண்ணியக் கவிஞர்கள் வாழ்வில் நுண்மையான மனப்போராட்டங்களையும், மன இறுக்கங்களையும் தங்கள் கவிதையின் மூலம் வெளிப்படுத்தினர். காலங்காலமாக இருந்து வரும் மரபுகளை உடைத்துவிட்டு புதிய உள்ளடக்கத்துடனும், வடிவத்துடனும், தங்களின் கவிதையைப் படைத்தனர். உடல்மொழியை வெளிப்படையாகப் பயன்படுத்தி கருத்துக்களை வெளியிட்டனர். புதிய கோணத்தில் பெண்களின் மன உணர்வுகளையும் தனிப்பட்ட வாழ்க்கைச் சிக்கல்களையும் சுதந்திரமான முறையில் கவிதைகளாக்கினர்.

### பெண்களின் சுயத்தை வெளிக்காட்டல்

மனுசாஸ்திரங்களும், புராணங்களும், இதிகாசங்களும் ஆண்டாண்டு காலமாகப் பெண்களை அடிமைப்படுத்தும் நிலையைக் கண்டிக்கும் கவிஞர் சீதா வெங்கடேஷ் தன் கவிதை வழி தங்களுக்கான இடத்தைத் தாங்களே முடிவு செய்வோம் என்கிறார்.

“சீதையாக இருந்தோம்

தீக்குளிக்கச் செய்தீர்கள்

நளாயினியாக இருந்தோம்

சுமக்க வைத்தீர்கள்

சந்திரமதியாக இருந்தோம்

விற்று விட்டீர்கள் அதனால்

முடிவு செய்து விட்டோம்.

நாங்கள் நாங்களாவே இருப்பதென்று” (Tamilarasi, 2022)

என்ற வரிகள் மூலம் பெண்கள் தங்கள் சுயத்தை இழந்து அடிமையான நிலையினை கண்டிக்கிறார்.

### பெண்ணைப் பொருளீட்டும் கருவியாய்ப் பார்த்தல்

திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக நமது முன்னோர்கள் கூறினர். ஆனால் பெண்ணின் அழகைக் காரணம் காட்டி உடலமைப்பைக் காரணம் காட்டி அதன் மூலம் பணம் சமபாதிக்கும் ஆண்களின் மனநிலையைக் கண்டிக்கிறார் கவிஞர் தாமரை.

“மூக்கும் முழியும் சுமார்தானாம் எனக்கு

முத்தும் வைரமுமாய் மூக்குத்தி

நேர் செய்து விடுமாம் கணக்கு

அப்பாவின் வங்கி கணக்கு முழுவதும் துடைத்தாயிற்று

ஸ்கூட்டர் கேட்ட வாயை

அடைத்தாயிற்று” (Thamarai, 2002)

என்ற வரிகள் மூலம் சமூக நிலையை உணர்த்துகிறார்.

ஆண்களின் கொடூர மனநிலையை வெளிக்காட்டல்

“சுற்றிலும் காக்கைகள்

தலைக்கு மேலும்

முன்னும் பின்னும் கூட

துரத்தித் துரத்திக் கொத்துகின்றன

அலகை உட்செலுத்திச்

சதையைத் தின்னுகின்றன.

குதறுகின்றன.

ஓடுகிறேன்.

ஓடுகிறேன்

நான் வல்லூறு

என்பதையே உணராமல்" (Parameshwari, 2005)

என்ற பரமேஸ்வரி எழுதிய கவிதையின் மூலம் ஆண்வர்க்கத்தின் கொடூர மனநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். வல்லூறுகளாக இருந்தும் எதையும் செய்ய முடியாத அவலத்தை வெளிக்காட்டுகிறார். சதையைக் கொத்தித் தின்னும் காக்கைகளாக ஆணினத்தை காட்சிப்படுத்துகிறார்.

## எழுத்துக்களால் தண்டனை வழங்கல்

"என் புழங்குவெளியைச் சுற்றி

விஷக்கோடுகளை வரைந்தீர்கள்

திணையின் நீள அகலங்கள் அவ்வளவுதானா

கால்கள் நடப்பதற்கு ஏங்கின

ஆனாலும் உங்களை நீங்களே

துண்டித்துக் கொண்டதை எண்ணி நகையாடுகிறேன்

இன்னொரு பருவத்தையும்

பறித்துக்கொள்ள கை நீட்டுகிறீர்கள்

இழுத்துப் பிடித்துக் கைகளை உடைக்கிறேன்

மனம் இரண்டாகும்படி முறிந்து வீழ்கிறீர்கள்

இது என்னுடைய முதுவேனிற் காலம்

என் பருவங்களை அழித்தொழிக்கும் உங்களை

துள்ளத் துடிக்கப் பழி வாங்குகின்றேன்

சாகடிக்கவே முடியாத என் எழுத்துகளால்" (Sugirtharani, 2022)

என்ற வரிகள் மூலம் கவிஞர் சுகிர்தா ராணி அவர்கள் குழந்தைப் பருவம் முதல் தற்பொழுது வரை பெண்ணினுடைய கனவுகள் தகர்க்கப்பட்டுப் பெண்ணுக்குப் பல்வேறு வகைகளில், விலங்குகள் பூட்டி அவளை நடமாட முடியாமல் செய்ததைக் கண்டிக்கும் கவிஞர் சாகமுடியாத எழுத்துக்களால் ஆண் வர்க்கத்திற்குத் தண்டனை வழங்குகிறார்.

## மௌனமாய் எதிர்கொள்ளல்

"அலுப்போடும் சலிப்போடும்

வந்த கணவன்,

அகப்பட்ட மனைவியை

அடித்து உதைத்து

வடிகால் தேடினான் அரிப்புகளுக்கு,

அவள் அமைதியாய் இருந்தாள்!

அவள் காது கூசும் சொற்களே

சுப்ரபாதமான போதும்

தன் சுனைக்கண் துடைத்துச்

சும்மா இருந்தாள்!

புண்ணான மனம் மறைத்துப்

பணிவிடைகள் செய்து விட்டுச்

சுண்ணாம்பு முகத்தோடு மௌனம் காக்கின்றாள்

கொதித்தலில் பதப்படும்

சோறு தந்த பாடம்." (Parameshwari, 2005)

ஆண்களால் பெண்கள் தினம் தினம் படும் அவலங்களைத் தன் கவிதை வழி வெளிப்படுத்தகிறார் பரமேஸ்வரி. ஆண்களின் வார்த்தைகளால் ஏற்படும் மன வலியைக் கண்ணீரை மன அழுத்தங்களை மனதிற்குள்ளேயே புதைத்து எதையும் செய்ய முடியாமல் மௌனமாகத் தங்கள் பணிகளைத் தொடர்வதாகக் கவிஞர் மன வருத்தத்தை வெளியிடுகிறார்.

## பெண்களின் கனவு தகர்தல்

பெண்ணின் திருமணக் கனவு தந்தையின் வற்புறுத்தலால் தகர்ந்து போகிற சூழலைக் கவிஞர் கனிமொழி வெறிப்படுத்துகிறார். பெண்ணின் நியாயமான உணர்வுகள் உரிமைகள் மறுக்கப்படும் நிலையினை வெளிப்படுத்தகிறார்.

"கல்யாண நேரத்தில்

வீடு வெள்ளையடிக்கப்பட்ட போது

விட்டத்தில் அவள்

சொருகி வைத்திருந்த கனவுகளுக்கும்

நிறம் மாற்றப்பட்டது." (Tamilarasi, 2022)

## பெண் கருவிலே சமாதி ஆக்கப்படல்

பெண் குழந்தைகள் கருவிலேயே சமாதி ஆக்கப்படுவது இன்றும் தொடர் கதையாகவே இருந்து வருகிறது. இப்படிப்பட்ட அவலத்தைக் கண்டிக்கிறார் கவிஞர் பரிதா பானு.

"பெண் கருவை அழிக்காதீர்கள்

பெண்ணை வாழவிடுங்கள்

தொப்புள் கொடி அறுக்கும் முன்னே

கண்ணைத் திறந்து உலகத்தைக் காணும் முன்னே

ஆயுதத்தை எடுத்து

ஆயுளை முடிக்காதீர்." (Tamilarasi, 2022)

### ஆண்களால் சீரழிக்கப்படுதல்

ஆண்களின் சதையாசையால் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாகும் பெண்களின் அவலத்தைக் கண்டிக்கிறார் கவிஞர் மீனாட்சி.

“சதையாசை நரிகளுக்கும்

பலியாகும் பால் கன்றுகள்

ஊர் காக்க உடுப்புப் போட்டவனின்

உடும்புப் பிடிக்குள்ளும்

பெரியதன்காரர்களின்

சின்னத்தனங்களில்

சிக்கிக் கிழிந்த தனலட்சுமிகளே” (Meenakshi, 2002)

என்று ஆண்களால் பலியாகும் பெண்களுக்காக வருந்துகிறார்.

### பெண்ணை உயிரற்ற ஜடப்பொருளாய் பார்த்தல்

இச்சமூகம் பெண்ணை ஒடுக்குவதற்காகப் பல்வேறு தந்திரங்களைக் கையாளுகிறது. பெண்ணை வியாபாரப் பொருளாக மாற்றிக் கலாச்சாரப் பண்புகளுக்குள் அடக்கி அவளை உயிரற்ற ஜடப்பொருளாகக் காணும் ஆண் சமூகத்தின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார் கவிஞர்.

“பந்தயங்களில் பணயமாக்கப்பட்டேன்

கோயில்களில்

விக்கிரகங்களாக்கப்பட்டேன்

எனக்காகப் போர் தொடுத்தார்கள்

கவர்ந்தவனிடமீருந்து மீட்டார்கள்

காவியம் படைத்தார்கள்

உடமையாய் உரியவளாய்

உயிரற்ற ஜடப்பொருளாய்

ஆகிப்போனேன்” (Tamilarasi, 2022)

என்று பெண்களுக்காக ஆண்கள் செய்த செயலைப் பட்டியலிடுகிறார் கவிஞர் கனிமொழி.

### பெண்ணை நுகர்வுப்பொருளாக்குதல்

பெண்ணை நுகர்வுப் பொருளாகவும், கவர்ச்சிப்பொருளாகவும் மட்டுமே ஆண் சமூகம் தொடர்ந்து பார்த்து வருகிறது. பெண்களின் அங்கங்களை வர்ணிப்பதே பலர் தொழிலாக கொண்டுள்ளனர். பெண்களுக்கென்று இதயம், ஆத்மா, உணர்வுகள் இருக்கிறது என்பதை ஆண் சமூகம் அறியாமல் இருப்பதை நினைத்துக் கவிஞர் சங்கரி கோபத்துடன் தன் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்.

“எனக்கு முகம் இல்லை

இதயம் இல்லை ஆத்துமாவும் இல்லை

ஆண்களின் பார்வையில் இரண்டு மார்புகள்

நீண்ட கூந்தல் சிறிய இடை பருத்த தொடை

கதைக்கு அவர்கள் எப்போதும் எனது உடலையே

நோக்குவர் கணவர் தொடக்கம்

கடைக்காரன் வரைக்கும்

இதுவே வழக்கம்" (Tamilarasi, 2022)

என்று ஆண் சமூகத்தின் முகத்திரையைக் கிழிக்கிறார்

## முகமூடி ஆண்கள்

ஆண்கள் பல்வேறு வகைகளில் தங்களின் முகபாவனைகளை நேரத்திற்கு ஏற்றாற்போல் மாற்றிக்கொள்கின்றனர். உண்மையான முகம் அறியாமல் திருமண வாழ்க்கைக்குள் அடியெடுத்த வைத்த ஒரு பெண்ணின் அவல நிலையினைக் கவிஞர் சிவரமணி வெளிப்படுத்துகிறார்.

"அசோகவனங்கள் அழிந்து போய்விடவில்லை

இந்த வீடே

எனக்கான அசோகவனமாயுள்ளது

ஆனால்

சிறைபிடித்தது இராவணனல்ல, இராமன் தான்

இராமனே, இராவணனாய்

தனது அரசிருக்கையின் முதுகுப்புறமாய்

முகமூடிகளை மாற்றிக் கொண்டதைப்

பார்க்க நேர்ந்த கணங்கள்

இதயம் ஒருமுறை அதிர்ந்து நின்றது" (Tamilarasi, 2022)

என்று தன் வேதனையை விளக்குகிறார்.

## பெண் தன் சுயம் இழத்தல்

பெண்களின் வாழ்க்கைப் பயணத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு சூழல்களினால் தன் சுயத்தை இழந்து போகிறாள். சுயத்தைத் தேடி அலைபவளாக இருக்கிறாள். கவிஞர் வத்ஸலா தன் கவிதையின் மூலம் தன் சுயம் இழந்து இருப்பதை வெளிப்படுத்துகிறார்.

"எனக்குள் இருந்த என்னையோ

காணவே காணோம்

எஞ்சியிருப்பது

அடிமனதில் கனன்றெறியும் தழலும்

நீ இல்லாத சமயங்களில்

குற்ற உணர்வின்றி

கட்டிலின்மேல் நான் கழற்றி வைக்கும்

நீ கட்டிய தாலியும் தான்" (Tamilarasi, 2022)

நாளைய நம்பிக்கை பிரகடனம்

"நாமிந்த உலகிற்கு

நரகத்துள்ளல்லவா வந்து பிறந்துள்ளோம்

புதை குழிகளில்

சாகாத பிணங்களாய்

சதா வாழவா வந்தோம்

இல்லை

புதிதாய்ப் பிறப்போம்

புதுமைகள் செய்வோம்" (Tamilarasi, 2022)

பெண்களின் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள் தினம் தினம் தொடர்ந்து கொண்டே தான் வருவதைத் தவிர முடிந்தபாடில்லை. இந்நிலையில் கவிஞர் கல்பிகா பெண்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளி ஏற்றுகிறார். நாளும் சாகாத பிணங்களாய் வாழ்வதற்காய்ப் பிறந்தோம். இல்லை புதிதாய்ப் பிறப்போம் என்று நம்பிக்கை ஊட்டுகிறார்.

## ஆண்களின் குரூரப் பார்வைகள்

"ஆடை மாற்றுகையில்

கழன்று விழுகின்றன

உடல் முழுவதும் பதிந்திருந்த

பார்வைகள்

தீண்டல்கள்

தொடுதல்கள

உரசல்கள்" (Vennila, 2008)

என்று வெளியில் சென்று வீடு திரும்புகையில் ஆண்களால் ஏற்படும் மன உளைச்சலை வெளிப்படுத்துகிறார் கவிஞர் வெண்ணிலா.

## முடிவுரை

பெண் கவிஞர்கள் படைப்பில் பெண்ணிய ஆளுமை வெளிப்பாடு குறித்த செய்திகளை ஆராயும் பொழுது பெண்கள் தனியாக முடிவெடுக்கும் திறன் பெற்றவர்கள், செயல்படும் திறன் பெற்றவர்கள், உரிமையை எல்லா நிலைகளிலும் நிலை நிறுத்தும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதை இக்கவிதைகள் மூலம் உணர முடிகிறது. மேலும் பெண் என்பவள் போகப்பொருளில்லை. நுகர்வுப் பொருளில்லை, ஜடப்பொருளில்லை என்பதையும் அவர்களின் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. தங்களுக்கான சுதந்திரத்தையும், கௌரவத்தையும் எந்த சூழ்நிலையிலும் யாருக்காகவும் இழக்க முடியாது என்பதை அவர்களின் கவிதைகள் உரத்துச் சொல்லுகின்றன என்பதை இவ்வாய்வின் மூலம் கண்டறிய முடிகிறது.

## References

Alphose, A. (1988) Malarin Marupakkam, Assisi Puthaga Nilayam, Nagarkovil, India

Britto Peeter Singh, (1994) Veerkali Thedi, Anal Veliyedu, Trichy, India

Meenakshi, R. (2002) Meenakshi Kavithaigal, Kavya Publication, Chennai, India

Parameshwari, T. (2005) Enakana Velicham, Vamsi Books, Thiruvannamalai, India

Prema, R. (1998) Penniya Anugumuraikal, Tamil Puthagalayam, Chennai, India

Seyakumar, (1984) Penkal Padaipil Samugam, Kavitha achagam, Chennai, India

Sivasubramaniyan, N. (1991) Penniya Sirapithal, Uma Achagam, Thirunelveli, India

Sugirtharani, (2022) Neer Valam Ambal, Kalachuvadu Publication, Nagarkovil, India

Tamilarasi, P. (2022) Erupatham Nutrandil Pen Kavinargal, Nanthan Pathipagam, Coimbatore, India

Thamarai, (2002) Oru Kathavum Kallipalum, Kumaran Pathipagam Chennai, India

Vennila, A. (2008) Aathiyil Sorkal Irunthana, Anbu Nila Pathipagam, Vandavasi, India

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

A. Peter Raj, Reflecting Feminism in the works of Women Writers, Indian Journal of Multilingual Research and Development, Vol 4, Iss 3, (2023) 20-29. DOI: https://doi.org/10.54392/ijmrd2333